1974 ஏப்ரல் 11]

கையெழுத்து என்னிடம் இருக்கிறது. தலைவர் அவர்களிடம் காண்பிக்க வேண்டுமானால் காட்டுகிறேன். செலக்ஷன் கமிட்டியில் யார் யாரைச் சொன்னார்களோ, எங்களுக்கு தெரிவிக்கப்பட்டதோ அந்தப்படி தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அடுத்த கேள்வி செலக்ஷன் கமிட்டியில் உள்ளவர்கள் மார்க் போடும்போது விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்கள், விவசாயத்தில் பரம்பரையாக ஈடுபட்டு, விவசாயம் தெரிந்தவர்களுக்கு, சற்று அதிகம் மார்க் கொடுக்க வேண்டுமென்பது. இன்னதுக்கு இவ்வளவு மார்க் என்று கோர்ட்டு உத்திரவுப்படி ஒதுக்கியிருக்கிறோம். அதில் Optitude என்ற பகுதியிருக்கிறது. aptitude பகுதியில் நிச்சயம் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு அங்கே செலக்ஷன் கமிட்டியில் உள்ளவர்கள் அதிகமான மார்க் போட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

கொள்ளு பயிரிடல்

* 822 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்தப் பகுதிகளில் கொள்ளு பயிர் செய்யப்படுகின்றது?

(இ) 1972-73-ஆம் ஆண்டில் அதன் மொத்த உற்பத்தி என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) நீலகிரி, மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள் தவிர, மற்ற அனைத்து மாவட்டங்களிலும் கொள்ளு தமிழ்நாட்டில் பயிரிடப்படுகிறது.

(இ) 1972-73-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 48,850 டன் கொள்ளு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

ஆற்காடு ஒன்றியத்தில் புதிய பாலங்கள்

* 823 வினா.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை தொகுதி, ஆற்காடு யூனியனைச் சேர்ந்த பாப்பேரி, குக்குண்டி கிராமங்களுக்கு அருகே ஓடும் கால்வாய்களின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இந்தப் பாலம் கட்டுவது சம்பந்தமாக பஞ்சாயத்து யூனியன், டி.டி.சி. ரெக்கமெண்டு செய்து அனுப்பியுள்ளார்கள். பல காலமாக பாதை வசதியில்லாமல் அவதிப்படுகிறார்கள்.

தேர்தல் நேரத்தில் நான் வேறு வாக்கு கொடுத்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் என்னை இதிலிருந்து காப்பாற்றுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சாலைகள் ஊராட்சி ஒன்றிய சாலைகள் அல்ல. ஊராட்சி மன்றத்தின் சாலைகள். இந்த ஊராட்சி சாலைகளை எடுத்துக் கொள்வதில் மராமத்து பிற வேலை வாய்ப்பு திட்டத்தின் கொள்கையில் கூட இது வாராது. காரணம் 1,500 மக்களுக்கு குறைவாக இருக்கிறது. அதைப் போலவே இதை வேறு பிற சாலைகள் "அதர் ரோட்ஸ்" என்ற திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டுமானால் இந்த ஆண்டு நிதிநிலை இடம் தரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அணைக்கட்டு கால்வாய் போகக் கூடிய பகுதி.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, தனித் தனியாகச் சொல்ல வேண்டுமானால் பாப்பேரி சாலைக்கு 75 ஆயிரம் ரூபாய். அதைப் போலவே சின்னகுக்குண்டி சாலைக்கு 75 ஆயிரம் ரூபாய். குக்குண்டி சாலை அபிவிருத்தி செய்வதற்காகவும், அங்கே பாலம் கட்டுவதற்காகவும் ஏறத்தாழ 1 லட்சம் ரூபாய்க்கு மேல் ஆகின்ற காரணத்தாலே இந்த 2½ லட்சம் ரூபாய் இந்த ஆண்டு நிதிநிலை அதற்கு சரியாகயில்லை. இதர ரோட்ஸ் திட்டத்தில் இப்படிப்பட்ட வேலைகள் இதர சாலைகள் திட்டமாக சேர்த்துக் கொள்ளப்படும் வழக்கம். இந்த ஆண்டு இதர சாலைகளுக்கு நிதி ஒதுக்கவில்லை.

திரு. நா. வீராசாமி: ஒவ்வொன்றுக்கும் 75 ஆயிரம் ரூபாய் என்று சொன்னார்கள். அதிலே எங்களையெல்லாம் காப்பாற்றிக் கொள்வதற்காக கேள்வி கேட்கவில்லை. பாலாற்றிலிருந்து தண்ணீர் வந்தால் அந்த கிராமங்களுக்குள்ளே போக முடியாது. தப்பித் தவறி புதிதாக திருமணம் செய்த தம்பதி வந்தால் அந்தக் கரையில் இருக்க வேண்டும். ஆகவே தான் இந்த மழை காலங்களில் அந்தக் கால்வாய் தண்ணீர் போக வேண்டிய நேரத்தில் கிராமங்களுக்குள்ளே போக முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் ஒரே ஆண்டில் எடுத்துக் கொள்ளாவிட்டாலும் ஒவ்வொரு ஆண்டு ஒவ்வொரு கிராமம் எடுத்துக் கொள்வது என்ற நிலையில் அமைச்சர் அவர்கள் அனுமதி அளிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இந்த குக்குண்டி சாலை ஆர்காடு வட்டத்தில் குக்குண்டி ஊராட்சி சாலையாகும். இந்த சாலையின் மொத்த நீளம் 2 கிலோ மீட்டர். இச்சாலை ஆற்காடு திண்டிவனம் சாலை கிலோ மீட்டர் 8/6-ல் பிரிகிறது. இதில் கிலோ மீட்டர் 0/0-0/3 வரை சரளைக்கல் பரப்பும் வேலை நடைபெற்றிருக்கிறது. மீதியுள்ள சாலை முரம்பு பரப்புமாக இருக்கிறது.

1974 ஏப்ரல் 11]

1/0 கிலோ மீட்டர் முதல் 1/2 வரை பொதுப் பணித்துறையின் பராமரிப்பிலிருந்து வரும் குக்குண்டி ஏரி நீர்பிடிப்பு இடத்தினுள் செல்கிறது. ஏரியில் அதிக அளவு நீர்மட்டம் உயரும்போது இந்த நீர்பிடிப் பரப்பான சாலையும் (கிலோ மீட்டர் 1/0—1/2 வரை) நீரில் மூழ்கி விடுகிறது. இவ்விடத்தில் பாலம் அமைக்கவும் 1/0—1/2 கிலோ மீட்டர் வரை சாலையை உச்ச அளவு நீர் மட்டத்தை விட உயர்த்தி பாதுகாப்பு சுவர் எழுப்பவும் ரூபாய் 1 லட்சம் தேவைப்படுமென்று குறிப்பிட்டேன். அது இப்பொழுது அந்த திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. மீண்டும் அதுபற்றி அனுப்புவார்களானால் பொதுப் பணித்துறையிடம் சொல்லி அது பற்றி ஏற்பாடு செய்யலாம்.

திரு. நா. வீராசாமி : பொதுப்பணித்துறையில் செய்ய முடியாது என்று சொல்லி விட்டார்கள். பொதுப்பணித்துறைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை . . .

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பாயிண்ட் ஆப் ஆர்டர். நம்முடைய மாமன்றத்தில் ஏற்கனவே உங்களுக்கு முன்பிருந்த பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு ரூலிங் கொடுத்திருக்கிறார். "A member should catch the eye of the Speaker and not the ear". இன்றைக்கு பேரவைத் தலைவர் சத்தம் போடுகிறவர்களுக்குத் தான் நிறைய கேள்விகளை அனுமதித்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்த நிலை தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்குமானால் ஒழுங்காக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரும் கூச்சல் போடவில்லை. எல்லா மெம்பர்களும் கேட்கிறார்கள் என்ற நிலை வருகிறது. திரு. சௌந்தர பாண்டியனுக்கு முக்கியமான கேள்விகள் என்ன வருகிறது என்று அந்தக் கேள்விகளைக் கொடுக்கிறேன். குக்குண்டி வடாற்காடு மாவட்டத்தில் இருப்பதால் சௌந்தரபாண்டியனுக்கு அதுபற்றி துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு கொடுக்க முடியாது.

திரு. நா. வீராசாமி : பொதுப்பணித் துறையினர் அதற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை, செய்ய முடியாது என்று தெளிவாகச் சொல்லி விட்டார்கள். ஆனால் மழை காலங்களில் நிச்சயமாக அந்த ஏரி நிரம்பி உள்ளே போகின்ற காரணத்தால் அமைச்சர் அவர்களிடத்தில் வேறு நிதி இருக்கிறது. அந்த நிதியிலிருந்து ஏதாவது சிறிது ஒதுக்கி, ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு பாலம், அணைக்கட்டுகள் கட்டுவதற்கு அமைச்சர் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: வேறு எந்தவிதமான நிதியும் என்னிடத்தில் இல்லை. அந்த நிதியை பொதுப்பணித் துறையினர் செலவழிப்பதற்கு அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். காரணம், பொதுப் பணித்துறையின் அந்த அணையிலிருந்து தான் தண்ணீர் வழிந்து சாலை மோசமாக ஆகிக் கொண்டிருக்கிறது. எனவே இதை ஊராட்சி மன்றம் செய்ய இயலாது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

திரு. கே. எ. வகாப்: சாலை போடுவதைப் பற்றிச் சொன்னார்கள், சாலை போடுவது பொதுப் பணித் துறை சம்பந்தப்பட்டது தான். ஆகவே தான், இந்தக் கேள்வியை பொதுப்பணித் துறைக்கு அனுப்பினேன். உள்ளாட்சித் துறைக்கு வந்திருக்கிறது. எப்படியாவது இதைச் செய்வதற்கு பொதுப் பணித்துறையோ அல்லது பிற ரோடு சாலைகள் என்று சொன்னார்கள், அந்த துறையில் எடுத்து வேண்டுமானால் செய்யட்டும், சாலை தேவை என்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு எப்படியாவது முயற்சி எடுத்து செய்ய வேண்டும், ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த நீர் பிடிப்பு ஏற்படுகின்ற நேரத்தில் இப்படிப்பட்ட இடையூறுகள் வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இது சம்பந்தமாக மேற்கொண்டு அதர் ரோட்ஸ் அதில் செய்ய இயலாது என்று தெரிந்தவுடன், அதற்குப் பிறகு வேறு நிதியிலிருந்து செய்வதற்கு இந்த நிதி நிலையில் வழி வகை ஒன்றும் காணப்படவில்லை. அதைத் தனியாக எழுதி அனுப்புவார்களானால் அதைப் பரிசிலனை செய்யச் சொல்லி முதலமைச்சர் அவர்களுக்கும், நிதியமைச்சர் அவர்களுக்கும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எழுதி அனுப்புகின்றேன்.

Surcharge under Radhapuram Canal System

* 824. *Q.*—THIRU T. GANAPATHY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state.—

(*a*) the rate of surcharge proposed to be collected in the areas under the Radhapuram Canal System in Tirunelveli district; and

(*b*) on what basis the surcharge is calculated?